**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 309/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW–10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.ராஜ்மோகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லப்பா | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.12.2015 அன்று 50 வயதுடைய மாடக்கண் மகன் ஜெயராஜ் என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவருடைய தலைப்பகுதிக்கும், நெஞ்சுபகுதிக்கும் எக்ஸ்–ரே எடுத்து பார்த்ததில் எந்தவிதமான எலும்பு முறிவு காயங்களும் இல்லை என தெரிய வந்தது. அவர் சிகிச்சையில் இருக்கும் போது மருத்துவரின் அனுமதியின்றி மருத்துவமனையிலிருந்து 20.12.2015 அன்று வெளியேறி விட்டார். நான் வழங்கிய சிகிச்சை விபரச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது, அவரிடம் எக்ஸ்-ரே ரிப்போர்ட் எதுவும் நான் கொடுக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sivamurugan, Junior Assistant திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.16 10:59:47 +0530